ஓம்



ஸ்ரீ சாயி கணேசன்

பகவான்

# ஸ்ரீ ஸத்யஸாயி பாபா

# அஷ்டோத்தர சத நாமாவலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சிவ சாயி மகாதேவாய நம:
ஓம் சிவ சாயி மகாதேவாய நம:
ஓம் சிவ சாயி மகாதேவாய நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவான் ஸ்ரீ ஸத்யஸாயி பாபாவின்

# நூற்றி எட்டு திவ்ய திருநாம ஸ்தோத்திரம்

எளிய தமிழ் பொருள் விளக்கத்துடன்

1. ஓம் ஸ்ரீ பகவான் சத்யஸாயி பாபாய நம:
ஓங்கார ஸ்வரூபமான, ஸ்ரீமான், சத்யமான, ஆதி பிதா மாதாவாகிய பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா அவர்களுக்கு நமஸ்காரம்.

2. ஓம் ஸ்ரீ ஸாயி சத்ய ஸ்வரூபாய நம:
ப்ரணவம் என்பது ஓம். அதுவே வடிவமான ஸாயி ஸத்யமே உருவானவர், அவருக்கு நமஸ்காரம்.

3. ஓம் ஸ்ரீ ஸாயி ஸத்யதர்ம பராயணாய நம:
ஸத்யத்திலும், தர்மத்திலும், நிலைத்து இருப்பவருக்கு நமஸ்காரம்.

4. ஓம் ஸ்ரீ ஸாயி வரதாய நம:
வரங்களை அருளுபவருக்கு நமஸ்காரம்.

5. ஓம் ஸ்ரீ ஸாயி சத்புருஷாய நம:
தூய்மையான புருஷருக்கு நமஸ்காரம். சத் என்பது சத்யம், தர்மம், சாந்தி, ப்ரேமையின் ஒருமித்த குணத்தைக் குறிக்கும் தூய்மையை உணர்த்துகிறது.

6. ஓம் ஸ்ரீ ஸாயி ஸத்ய குணாத்மனே நம:
ஸத்யம் என்கிற உண்மையையே குணமாகக் கொண்டவருக்கு நமஸ்காரம்.

7. ஓம் ஸ்ரீ ஸாயி சாது வர்த்தனாய நம:
நல்ல நடத்தை உள்ளவருக்கு நமஸ்காரம்.

8. ஓம் ஸ்ரீ ஸாயி சாது ஜனபோஷணாய நம:
நல்லவர்களைக் காப்பாற்றுபவருக்கு நமஸ்காரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. ஓம் ஸ்ரீ ஸாயி சர்வக்ஞாய நம:
எல்லாம் அறிந்தவருக்கு நமஸ்காரம்;

10. ஓம் ஸ்ரீ ஸாயி சர்வ ஜன ப்ரியாய நம:
எல்லா மக்களுக்கும் அன்பானவருக்கு நமஸ்காரம்.

11. ஓம் ஸ்ரீ ஸாயி சர்வ சக்தி மூர்த்தயே நம:
எல்லாவிதமான சக்திகளும் சேர்ந்த வடிவமானவருக்கு நமஸ்காரம்.

12. ஓம் ஸ்ரீ ஸாயி சர்வேசாய நம:
சர்வ + ஈசன் = சர்வேசன்.
அனைத்துக்கும் தலைவனாக விளங்கும் பகவானுக்கு (ஈசனுக்கு) நமஸ்காரம்.

13. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ ஸங்க பரித்யாகினே நம:
சகலவிதமான பற்றுக்களையும் துறந்தவருக்கு நமஸ்காரம்.

14. ஓம் ஸ்ரீ ஸாயி சர்வாந்தர்யாமினே நம:
எல்லாவற்றின் உள்ளும், உறைந்து விளங்குபவருக்கு நமஸ்காரம்.

15. ஓம் ஸ்ரீ ஸாயி மஹிமாத்மனே நம:
மேன்மை வாய்ந்த ஆத்மாவாக விளங்குபவருக்கு நமஸ்காரம்.

16. ஓம் ஸ்ரீ ஸாயி மஹேஸ்வர ஸ்வரூபாய நம:
மஹா + ஈஸ்வரன் = மஹேஸ்வரன்
மேன்மை பொருந்திய ஈஸ்வர வடிவமானவருக்கு நமஸ்காரம்.

17. ஓம் ஸ்ரீ ஸாயி பர்த்தி கிராமோத்பவாய நம:
பர்த்தி (புட்டபர்த்தி) கிராமத்தில் (உத்பவாய) அவதரித்தவருக்கு நமஸ்காரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. ஓம் ஸ்ரீ ஸாயி பர்த்தி க்ஷேத்ர நிவாஸினே நம:
புட்டபர்த்தி என்ற திவ்ய க்ஷேத்திரத்தில் நிவாசம் அதாவது இருப்பிடம் கொண்டவருக்கு நமஸ்காரம்.

19. ஓம் ஸ்ரீ ஸாயி யச:காய ஷீர்டிவாசினே நம:
(யச: காய = புகழ் உடம்புடன் கூடிய) சீரடியில் வசித்தவருக்கு நமஸ்காரம்.

20. ஓம் ஸ்ரீ ஸாயி ஜோடி ஆதிபல்லி சோமப்பாய நம:
ஜோடி ஆதிபல்லி சோமப்பருக்கு நமஸ்காரம்.
ஆதிபல்லி, கைலாசத்தைக் குறிக்கும்; சோமப்பா, பிறை, சந்திரனைச் சூடிய சிவபிரானைக் குறிக்கிறது.

21. ஓம் ஸ்ரீ ஸாயி பாரத்வாஜ ரிஷி கோத்ராய நம:
பாரத்வாஜ ரிஷி கோத்ரத்தில் உதித்தவருக்கு நமஸ்காரம்.

22. ஓம் ஸ்ரீ ஸாயி பக்த வத்சலாய நம:
பக்தருக்கு (வாத்ஸல்யம்) தாய் அன்பு புரிபவருக்கு நமஸ்காரம்.

23. ஓம் ஸ்ரீ ஸாயி அபாந்தராத்மனே நம:
சர்வத்திலும் (அந்தர்) உள்ளத்தின் உள்ளே உறையும் ஆத்மாவாக இருப்பவருக்கு நமஸ்காரம்.

24. ஓம் ஸ்ரீ ஸாயி அவதார மூர்த்தயே நம:
அவ + தரணம் = அவதாரம்
இறைபொருள் இறங்கி மனித உருவில் வந்தவருக்கு நமஸ்காரம்.

25. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ பய நிவாரிணே நம:
சகலவிதமான பயங்களையும் போக்கடிப்பவருக்கு நமஸ்காரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. ஓம் ஸ்ரீ ஸாயி ஆபஸ்தம்ப ஸூத்ராய நம:
ஆபஸ்தம்ப ஸூத்திரத்தை சேர்ந்தவருக்கு நமஸ்காரம்

27. ஓம் ஸ்ரீ ஸாயி அபய ப்ரதாய நம.
அ(இல்லை) + பயம் (அச்சம்) = அபயம் (அச்சம் அற்ற தன்மை) அச்சத்தைஅகற்றி அருளுபவருக்கு நமஸ்காரம்

28. ஓம் ஸ்ரீ ஸாயி ரத்னாகர வம்சோத்பவாய நம:
ரத்னாகர வம்சத்தில் உதித்தவருக்கு நமஸ்காரம்.

29. ஓம் ஸ்ரீ ஸாயி ஷீரடிஸாயி அபேத சக்தி அவதாராய நம:
ஸ்ரீ சத்யஸாயிபாபாவே ஷீரடிஷாயி. அதில் பேதம் இல்லை. ஆகவே ஷீரடிஸாயி சக்தியுடனேயே தோன்றிய ஸ்ரீ சத்யஸாயிபாபாவுக்கு நமஸ்காரம்.

30. ஓம் ஸ்ரீ ஸாயி சங்கராய நம:
சங்கரருக்கு நமஸ்காரம்.

31. ஓம் ஸ்ரீ ஸாயி ஷீர்டி ஸாயி மூர்த்தயே நம:
ஷீர்டி ஸாயி வடிவமாக இருந்தவருக்கு நமஸ்காரம்.

32. ஓம் ஸ்ரீ ஸாயி துவாரகாமாயி வாஸினே நம:
துவாரகாமாயி என்ற ஷீர்டி மசூதியில் வசித்தவருக்கு நமஸ்காரம்.

33. ஓம் ஸ்ரீ ஸாயி சித்ராவதி தடபுட்டபர்த்தி விஹாரிணே நம:
சித்ராவதி நதி தடத்தில் அமைந்த புட்டபர்த்தியில் சஞ்சரிப்பவருக்கு நமஸ்காரம்.

34. ஓம் ஸ்ரீ ஸாயி சத்தீ ப்ரதாய நம:
சத் = நல்ல + தீ = புத்தி; நல்லபுத்தியைக் கொடுப்பவருக்கு நமஸ்காரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. ஓம் ஸ்ரீ ஸாயி சரணாகத த்ராணாய நம:
சரணாகதி அல்லது அடைக்கலம் அடைந்தவர்களைக் காப்பாற்றுபவருக்கு நமஸ்காரம்.

36. ஓம் ஸ்ரீ ஸாயி அனந்தாய் நம:
முடிவே இல்லாதவருக்கு நமஸ்காரம்.

37. ஓம் ஸ்ரீ ஸாயி ஆனந்ததாய நம:
ஆனந்தத்தைத் தருபவருக்கு நமஸ்காரம்.

38. ஓம் ஸ்ரீ ஸாயி ஆர்த்த த்ராண பராயணாய நம:
தீனர்களைக் காப்பாற்றுவதே தொழிலாகக் கொண்டவருக்கு நமஸ்காரம்.

39. ஓம் ஸ்ரீ ஸாயி அனாத நாதாய நம:
அனாதைகளுக்கு (நாதனாக) காவலனாக இருப்பவருக்கு நமஸ்காரம்.

40. ஓம் ஸ்ரீ ஸாயி அஸஹாய ஸஹாயாய நம:
அ + ஸஹாயம் = அஸஹாயம்,
அ = இல்லை ஸஹாயம் = உதவி
உதவி இன்றித் தவிப்பவருக்கு உதவி புரிபவருக்கு நமஸ்காரம்.

41. ஓம் ஸ்ரீ ஸாயி லோக பாந்தவாய நம;
உலகில் அனைவருக்கும் உறவினனாக விளங்குபவருக்கு நமஸ்காரம்.

42. ஓம் ஸ்ரீ ஸாயி லோக ரக்ஷா பராயணாய நம:
உலகத்தில் அனைவரையும் காப்பதே தொழிலாக உள்ளவருக்கு நமஸ்காரம்.

43. ஓம் ஸ்ரீ ஸாயி லோக நாதாய நம:
உலகத்துக்கே (நாதன்) தலைவன், காவலன், ஆக இருப்பவருக்கு நமஸ்காரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. ஓம் ஸ்ரீ ஸாயி தீன ஜன போஷணாய நம:
எளிய ஜனங்களைக் காப்பாற்றுபவருக்கு நமஸ்காரம்.

45. ஓம் ஸ்ரீ ஸாயி மூர்த்தி த்ரய ஸ்வரூபாய நம:
மும்மூர்த்தி ஸ்வரூபமாக (வடிவமாக) விளங்குபவருக்கு நமஸ்காரம்.

46. ஓம் ஸ்ரீ ஸாயி முக்தி ப்ரதாய நம:
முக்தி என்ற விடுதலைப்பேற்றை அளிப்பவருக்கு நமஸ்காரம்.

47. ஓம் ஸ்ரீ ஸாயி கலுஷ விதூராய நம:
துயரங்களைப் போக்குபவருக்கு நமஸ்காரம்.

48. ஓம் ஸ்ரீ ஸாயி கருணாகராய நம:
கருணை புரிபவருக்கு நமஸ்காரம்.
கருணை + ஆகராய = கருணாகராய அதாவது கருணைக்கே இருப்பிடமானவருக்கு நமஸ்காரம் எனவும் பொருள்.

49. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வாதாராய நம:
எல்லாவற்றிற்கும் ஆதாரமாக உள்ளவருக்கு நமஸ்காரம்.

50. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ ஹ்ருத்வாஸினே நம:
எல்லா இதயங்களிலும் வசிப்பவருக்கு நமஸ்காரம்.

51. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ புண்ய பலப்ரதாயினே நம:
சகலவிதமான புண்ய பலன்களையும் அளிப்பவருக்கு நமஸ்காரம்.

52. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ பாப க்ஷயகராய நம:
சகலவிதமான பாபங்களையும் போக்கடிப்பவருக்கு நமஸ்காரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ ரோக நிவாரிணே நம:

சகலவிதமான வியாதிகளையும் நீக்குபவருக்கு நமஸ்காரம்.

54. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ பாதா ஹராய நம:

சகலவிதமான கஷ்டங்களையும் அழிப்பவனுக்கு நமஸ்காரம்.

55. ஓம் ஸ்ரீ ஸாயி அனந்த நுத கீர்த்தனாய நம:

முடிவில்லாத துதிப் பாடல்களால் பாடப்படுபவருக்கு நமஸ்காரம்.

56. ஓம் ஸ்ரீ ஸாயி ஆதி புருஷாய நம:

தொன்றுதொட்டு விளங்கும் பழைமையான, முதன்மையான இறைதத்துவத்துக்கு நமஸ்காரம்.

57. ஓம் ஸ்ரீ ஸாயி ஆதி சக்தியே நம:

தொன்றுதொட்டு விளங்கும் பழைமையான, முதன்மையான சக்திக்கு நமஸ்காரம்.

58. ஓம் ஸ்ரீ ஸாயி அபரூப சக்தயே நம:

அற்புதமான சக்தியை உடையவருக்கு நமஸ்காரம்.

59. ஓம் ஸ்ரீ ஸாயி அவ்யக்த ரூபாய நம:

புலப்படாத ரூபம் (வடிவம்) உடையவருக்கு நமஸ்காரம்.

60. ஓம் ஸ்ரீ ஸாயி காம க்ரோத த்வம்ஸினே நம:

ஆசைகளையும் கோபத்தையும் நாசம் செய்பவருக்கு நமஸ்காரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61. ஓம் ஸ்ரீ ஸாயி கனகாம்பரதாரிணே நம:

கனக = பொன்.

பொன் நிறப் பட்டுப் பீதாம்பரத்தை அணிந்து கொண்டிருப்பவருக்கு நமஸ்காரம்.

62. ஓம் ஸ்ரீ ஸாயி அற்புத சர்யாய நம:

அற்புதமான செயல்களை உடையவருக்கு நமஸ்காரம்

63. ஓம் ஸ்ரீ ஸாயி ஆபத் பாந்த வாய நம:

ஆபத்தில் காக்கும் உறவினராக விளங்குபவருக்கு நமஸ்காரம்.

64. ஓம் ஸ்ரீ ஸாயி ப்ரேமாத்மனே நம:

அன்பே ஆத்மாவாக இருப்பவருக்கு நமஸ்காரம்.

65. ஓம் ஸ்ரீ ஸாயி ப்ரேம மூர்த்தயே நம:

அன்பே வடிவானவருக்கு நமஸ்காரம்.

66. ஓம் ஸ்ரீ ஸாயி ப்ரேம ப்ரதாய நம:

அன்பை அளிப்பவருக்கு நமஸ்காரம்.

67. ஓம் ஸ்ரீ ஸாயி ப்ரியாய நம:

ப்ரியமானவருக்கு நமஸ்காரம்.
(ப்ரியம் = விருப்பம்)

68. ஓம் ஸ்ரீ ஸாயி பக்த ப்ரியாய நம:

பக்தர்களிடம் ப்ரியமானவருக்கு நமஸ்காரம்.

69. ஓம் ஸ்ரீ ஸாயி பக்த மந்தாராய நம:

பக்தர்களுக்குக் கல்பவிருட்ஷம் போன்றவருக்கு நமஸ்காரம்.

கல்பவிருட்ஷம் (வேண்டியதை வழங்கும் மரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70. ஓம் ஸ்ரீ ஸாயி பக்த ஜன ஹ்ருதய விஹாராய நம:
பக்த ஜனங்களின் இருதயங்களில் சஞ்சரிப்பவருக்கு நமஸ்காரம்.

71. ஓம் ஸ்ரீ ஸாயி பக்த ஜன ஹ்ருதாலயாய நம:
பக்த ஜனங்களின் இருதயத்தையே ஆலயமாகக் கொண்டவருக்கு நமஸ்காரம்.

72. ஓம் ஸ்ரீ ஸாயி பக்த பராதீனாய நம:
பக்தர்களின் அடிமையாக இருப்பவருக்கு நமஸ்காரம்.

73 ஓம் ஸ்ரீ ஸாயி பக்திஞான ப்ரதீபாய நம:
பக்தி, ஞானம் என்ற விளக்காக (ஜோதியாக) திகழ்பவருக்கு நமஸ்காரம்.

74. ஓம் ஸ்ரீ ஸாயி பக்தி ஞான ப்ரதாய நம:
பக்தி ஞானம் அளிப்பவருக்கு நமஸ்காரம்.

75. ஓம் ஸ்ரீ ஸாயி சுக்ஞான மார்க்க தர்சகாய நம:
நல்ல ஞானப்பாதையைக் காட்டுபவருக்கு நமஸ்காரம்.

76. ஓம் ஸ்ரீ ஸாயி ஞான ஸ்வரூபாய நம:
ஞானமே வடிவானவருக்கு நமஸ்காரம்.

77. ஓம் ஸ்ரீ ஸாயி கீதா போத காய நம:
கீதையைப் போதிப்பவருக்கு நமஸ்காரம்.

(ஸ்ரீ கிருஷ்ணராக அவதரித்துத் தெய்வமே அர்ச்சுனனுக்கு உபதேசித்த ஆத்ம போதனையே கீதையாகும். பகவத் கீதை எனவும் பெயர் உண்டு.)

78. ஓம் ஸ்ரீ ஸாயி ஞான சித்திதாய நம:
ஞானத்தை அடையும்படி செய்பவருக்கு நமஸ்காரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

79\. ஓம் ஸ்ரீ ஸாயி ஸுந்தர ரூபாய நம:
அழகே வடிவானவருக்கு நமஸ்காரம்.

80\. ஓம் ஸ்ரீ ஸாயி புண்ய புருஷாய நம:
புண்யமே (புனிதமே) உருவான புருஷருக்கு நமஸ்காரம்

81\. ஓம் ஸ்ரீ ஸாயி புண்ய பல ப்ரதாய நம:
புண்ய-பலன்களைத் தருபவருக்கு நமஸ்காரம்.

82\. ஓம் ஸ்ரீ ஸாயி புருஷோத்தமாய நம:
புருஷர்கள் அனைவரிலும் உத்தமமானவருக்கு நமஸ்காரம்.

83\. ஓம் ஸ்ரீ ஸாயி புராண புருஷாய நம:
ஆதிகாலம் முதல் பழைமையாக விளங்கும் புருஷருக்கு நமஸ்காரம்.

84\. ஓம் ஸ்ரீ ஸாயி அதீதாய நம:
அப்பாற்பட்டவருக்கு நமஸ்காரம்.

85\. ஓம் ஸ்ரீ ஸாயி காலாதீதாய நம:
காலத்துக்கு அப்பாற்பட்டவருக்கு நமஸ்காரம்.

86\. ஓம் ஸ்ரீ ஸாயி ஸித்தி ரூபாய நம:
வெற்றி வடிவமானவருக்கு நமஸ்காரம்.

87\. ஓம் ஸ்ரீ ஸாயி ஸித்த சங்கல்பாய நம:
நினைத்ததை நிறைவேற்றுபவருக்கு நமஸ்காரம்.

88\. ஓம் ஸ்ரீ ஸாயி ஆரோக்ய ப்ரதாய நம:
ஆரோக்யத்தை அளிப்பவருக்கு நமஸ்காரம்.

89\. ஓம் ஸ்ரீ ஸாயி அன்ன வஸ்த்ர தாய நம:
உண்டி, உடை (உணவு, ஆடை) களைத் தருபவருக்கு நமஸ்காரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90. ஓம் ஸ்ரீ ஸாயி ஸம்ஸாரதுக்க க்ஷயகராய நம:
சம்சார (இல்லற) துக்கங்களைப் போக்கடிப்பவருக்கு நமஸ்காரம்.

91. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வாபீஷ்ட ப்ரதாய நம:
சகலவிதமான விருப்பங்களையும் நிறைவேற்றித் தருபவருக்கு நமஸ்காரம்.

92. ஓம் ஸ்ரீ ஸாயி கல்யாண குணாய நம:
திவ்ய கல்யாண குணங்கள் உடையவருக்கு நமஸ்காரம்.

93. ஓம் ஸ்ரீ ஸாயி கர்மத்வம்ஸினே நம:
கர்மங்களை (வினைப்பயன்களை) அழிப்பவருக்கு நமஸ்காரம்.

94. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வமத ஸம்மதாய நம:
எம்மதமும் சம்மதமாக, விளங்குபவருக்கு நமஸ்காரம்.

95. ஓம் ஸ்ரீ ஸாயி ஸாது மானஸ சோபிதாய நம:
தூயவர்கள் மனதில் பிரகாசிப்பவருக்கு நமஸ்காரம்.

96. ஓம் ஸ்ரீ ஸாயி ஸாது மானஸ பரிசோபகாய நம:
தூயவர்கள் மனதைப் பிரகாசிக்க வைப்பவருக்கு நமஸ்காரம்.

97. ஓம் ஸ்ரீ ஸாயி ஸாதகானுக்ரஹ வடவ்ருக்ஷ ப்ரதிஷ்டா - பகாய நம;
ஸாதனை செய்பவர்களுக்கு அனுகிரஹிக்கும் (அருளும்) பொருட்டு ஆலமரத்தை நட்டவருக்கு நமஸ்காரம்.

98. ஓம் ஸ்ரீ ஸாயி ஸகல ஸம்சய ஹராய நம:
சகலவிதமான சந்தேகங்களையும் நீக்குபவருக்கு நமஸ்காரம்.

99. ஓம் ஸ்ரீ ஸாயி ஸகல தத்வ போதகாய நம:
எல்லாவிதமான தத்துவங்களையும் (நீதிகளையும்) போதிப்பவருக்கு (புரியவைப்பவருக்கு) நமஸ்காரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100. ஓம் ஸ்ரீ ஸாயி யோகீஸ்வராய நம:
யோகிகளுக்குத் தலைவனாக விளங்கும் தெய்வத்துக்கு நமஸ்காரம்.

101. ஓம் ஸ்ரீ ஸாயி யோகீந்தர வந்திதாய நம:
சிறப்புமிக்க யோகிகளால் வணங்கப்படுபவருக்கு நமஸ்காரம்.

102. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ மங்களகராய நம:
ஸகலவிதமான மங்கள (சுப) காரியங்களையும் செய்பவருக்கு நமஸ்காரம்.

103. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ ஸித்தி ப்ரதாய நம:
எல்லாவிதமான வெற்றியும் தருபவருக்கு நமஸ்காரம்.

104. ஓம் ஸ்ரீ ஸாயி ஆபந்-நிவாரிணே நம:
ஆபத்தில் இருந்து விடுவிப்பவருக்கு நமஸ்காரம்.

105. ஓம் ஸ்ரீ ஸாயி ஆர்த்தி ஹராய நம:
கஷ்டங்களை அழிப்பவருக்கு நமஸ்காரம்.

106. ஓம் ஸ்ரீ ஸாயி சாந்த மூர்த்தயே நம:
சாந்தமே வடிவானவருக்கு நமஸ்காரம்.
(சாந்தம் = அமைதி)

107. ஓம் ஸ்ரீ ஸாயி சுலப ப்ரஸன்னாய நம:
எளிதில் மகிழ்ச்சி அடைபவருக்கு நமஸ்காரம்.

108. ஓம் ஸ்ரீஸ்ரீஸ்ரீ பகவான் ஸத்ய ஸாயி பாபாய நம:
பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபாவுக்கு நமஸ்காரம்.

✶ “ ஜெய் சாயி சத்ய நாமம் ” ✶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வ தர்ம பிரார்த்தனை

ஓம் தத்சத் ஸ்ரீ நாராயண து
புருஷோத்தம குரு து
சித்த புத்த து ஸ்கந்த விநாயக
சவிதா பாவக து (2)

ப்ரஹ்ம மஜ்ட து யஹாவ் சக்தி து
ஏசு பிதா ப்ரபு து
ருத்ர விஷ்ணு து ராம கிருஷ்ண து
றஹீம் தாஓ து (2)
வாசு தேவ் கோ விஸ்வ ரூப து
சித் தானந்த ஹரி து
அத்வி தீய து அகால நிர்ப்பய
ஆத்ம லிங்க சிவ து (3)

## சாந்தி ஸ்லோகங்கள்

ஓம் சந்நோ மித்ர: சம்வருண:
1. சந்நோ பவத் வர்யமா
சந் ந இந்த்ரோ ப்ருஹஸ்பதி
சந்நோ விஷ்ணு ருருக்ரம;
நமோ ப்ரஹ்மனே நமஸ்தே வாயோ
த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி
த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்ம வதிஸ்யாமி
ருதம் வதிஸ்யாமி ஸத்யம் வதிஸ்யாமி
தன்மா மவது தத்வக்தார மவது
அவது மாம் அவது வக்தாரம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(மித்திரன், வருணன், அர்யமா, இந்திரன், ப்ருஹஸ்பதி, விஷ்ணு ஆகியோர் எங்களுக்கு மங்கள காரர்களாக இருத்தல் வேண்டும். பிரம்மத்திற்கு நமஸ்காரம். வாயுவே உன்னை வணங்குகிறேன். உன்னைக் கண்கண்ட பிரம்ம மாகவும் ருதமாகவும் சத்யமாகவும் போற்றுகிறேன். பிரம்மம் என்னையும் ஆசாரியனையும் காப்பாற்றட்டும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஸஹனு வவது ஸஹ்நெள புனக்து
ஸஹ வீர்யம் கரவா வஹை
தே ஜஸ்விநு அவதீதம் அஸ்து மாவித் விஷாவஹை
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(பிரம்மம் நம்மிருவரையும் ஒருங்கே காப்பாற்றட்டும். ஒருங்கிணைந்துள்ள நம்மிருவரையும் ஆளட்டும். ஆசிரியர், மாணவர் என்ற நாமிருவரும் ஒருங்கிணைந்து மிகச் சிறந்த காவியத்தைச் செய்வோமாக. நம்மிருவருடைய கல்வியும் ஒளியுடையதாக இருக்கட்டும். நாமிருவரும் வெறுப்புக் கொள்ளாதிருப்போமாக.)

3. ஓம் பூர்ண மத பூர்ண மிதம்
பூர்ணாத் பூர்ண முதச்யதே
பூர்ணஸ்ய பூர்ண மாதாய
பூர்ண மேவா சிஷ்யதே
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(அது பூர்ணம். இதுவும் பூர்ணம். பூர்ணத்தில் இருந்து பூரணம் உதயமாகியுள்ளது. பூர்ணத்தினின்று பூர்ணத்தையெடுத்தும் பூர்ணமே மிஞ்சி நிற்கின்றது )

4. அஸதோமா ஸத்கமய
தமஸோமா ஜ்யோ திர்கமய
ம்ருத்யோர்மா அம்ருதம்கமய
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(பொய்மையிலிருந்து மெய்மைக்கும், இருளினின்று ஒளிக்கும், மரணத்தினின்று அழியாமைக்கும் என்னை வழி நடத்திச் செல்வாயாக.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்கள ஆரத்தி

ஓம் ஜய் ஜகதீச ஹரே ஸ்வாமி
சத்ய சாயி ஹரே

பக்த ஜன சம் ரக்ஷக (2) பர்த்தி மஹேஸ்வரா
ஓம் ஜய் ஜகதீச ஹரே

சசிவதனு ஸ்ரீ கரா சர்வ ப்ராணபதே (ஸ்வாமி)

ஆஸ்ரித கல்பல தீகா (2) ஆபத் பாந்தவா
ஓம் ஜய் ஜகதீச ஹரே

மாதா பிதா குரு தைவமு மரியந்தையு நீவே (ஸ்வாமி)
நாத ப்ரம்ம ஜகன்நாதா (2) நாகேந்திர சயனு
ஓம் ஜய் ஜகதீச ஹரே
ஓம் கார ரூபா ஓம் ஜய்சிவ
சாயி மகா தேவா (ஸத்ய)

மங்கள ஆரத்தி அந்துகோ (1) மந்தர கிரிதாரி
ஓம் ஜய் ஜகதீச ஹரே
நாராயண நாராயண ஓம் சத்ய நாராயண
நாராயண நாராயண ஓம்
நாராயண நாராயண ஓம் சத்ய (2)
நாராயண நாராயண ஓம்
ஓம் ஜய் சத்குரு தேவா
(நாராயண ......குருதேவா (3)

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
ஜய் போலோ பகவான் ஸ்ரீ சத்ய சாயிராம்
மஹாராஜிகி ஜய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்கள ஆரத்தி ஸ்தோத்திரத்தின் பொருள்

ஓம் உலகத்துக்கு ஈசனான ஹரியே உனக்கு ஜயம் உண்டாகுக. ஸ்வாமி ஸத்யஸாயி ஹரே, பக்த ஜனங்களைக் காத்தருளும் பர்த்தி மகேசுவரா, ஓம், ஜயம், ஜகதீச ஹரே,

ஒளிரும் முகமுடையோனே, மங்களகரனே, எல்லா உயிர்களுக்கும் நாதனே, ஸ்வாமி எல்லா உயிர்களுக்கும் நாதனே, ஆபத்துகளில் உற்றாரைப் போலே காப்பவனே, ஆபத்பாந்தவா, ஓம் ஜயம் ஜகதீசா ஹரே.

மாதா = தாய், பிதா = தந்தை, குரு, தெய்வம் மற்றும் எல்லாமும் நீயே ஸ்வாமி, மற்றெல்லாமும் நீயே நாத ப்ரும்மமும், ஜகன்னாதனும் (நீயே) நாகேந்த்ர = ஆதி சேஷன் மீது படுப்பவனே ஓம் ஜயம் ஜகதீச ஹரே.

ஓங்கார வடிவம் கொண்டவனே, ஒளிமயமானவனே, ஓ! ஸாயி மஹாதேவா, ஸத்ய ஸாயி மகாதேவா, மங்கள ஆரத்தி, பெற்றுக்கொள், மந்தர மலையைத் தாங்கியவனே, ஓம் ஜயம் ஜகதீச ஹரே.

''ஓம்''கார வடிவம் கொண்ட நாராயணா, நாராயணா- ஓம்- ஸத்ய நாராயணா, நாராயணா-ஓம்-ஸத்ய நாராயணா- ஓம்- ஓம்-ஸத்குருவான தேவனே!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஓம் சர்வே வை சுகின ஸந்து
ஸர்வே ஸந்து நிராமயா
ஸர்வே பத்ராணி பஸ்யந்து
மா கஸ் சந் து: கமாப் பனுயாத்

(எல்லோரும் இன்பம் அனுபவிப்பவர்களாகவும் நோயற்றவர்களாகவும் இருக்கட்டும். எல்லோரும் மங்களகரமானவற்றைப் பார்க்கட்டும். ஒருவரும் துன்பமடையாமல் இருக்கட்டும்.)

ஓம் தத் சத் ஓம்

**மங்களம் மங்களம் மங்களம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலவச வெளியீடு :

**சத்யசாயி வேதாந்த தபோவனம்,**

இல. 9, கண்டி வீதி, நாவற்குழி,

கைதடி.

ஸ்ரீ சோழன் பிரசுராலயம் [illegible], கொக்குவில் கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org